## கொளத்தூர் தொகுதியில் மாணவ-மாணவியர்க்கு

# கல்வி உபகரணங்கள், நலத்திட்ட உதவிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று 27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயிலுக்கு ஓதுவார் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பார்வைதிறனற்ற மாற்றுத்திறனாளி செல்வி எஸ்.எஸ். பிரியவதனாவிற்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஶ்ரீதர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த 318 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு தெரிவித்து, கல்வி உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 350 மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 350 மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் 100 பயனாளிகளுக்கு கண்ணாடிகளை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த 318 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு தெரிவித்து, கல்வி உபகரணங்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூர் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாச்சலம் நகர் உபரிநீர் கால்வாயினை 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் திறந்தவெளி கால்வாய் மற்றும் மூடிய வடிவிலான கால்வாயாக மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாயை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு. மகேஷ்குமார், நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.05.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் கொளத்தூர், பழனி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் 22.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்களின் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஶ்ரீதர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.5.2025) வடபழனியில் நடைபெற்ற சென்னை மாநகராட்சியின் தி.மு.கழக மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர் திருமதி.காமாட்சி தம்பதியினரின் மகள் பா.லலிதாம்பிகை (எ) லலிதா, ஏ.பாஸ்கரன் திருமதி பா.ராதா தம்பதியினரின் மகன் பா.கணேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தியாகராயர்நகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி, உள்பட இளைஞரணியினர், கழக முன்னணியினர் உள்ளனர்.






குன்றத்தூரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தாயார் ராஜாமணி மோகலிங்கம் அவர்களின் நினைவிடத்தையும், தியான மண்டபத்தையும் கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு, எம்.பி., திறந்து வைத்து அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செய்தார். உடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, மு.பாபு, கழக தீர்மான குழு தலைவர் மீ.அ.வைதியலிங்கம், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம், ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், துணை மேயர் கோ.காமராஜ், பகுதி ஒன்றிய நகரச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், கோ.சத்தியமூர்த்தி, ஏ.வந்தேமாதரம், இ.எஸ்.பெர்னாட் மற்றும் கழக முன்னணியினர் கலந்துக்கொண்டனர்.